## <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.**27.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 27.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.வேதாத்ரி |
| த/பெ. | திரு.தாமோதரராவ் |
| வயது | 61/2026 |

துவக்க நேரம் 1.10 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

1. நான், கடந்த 12.06.2020 அன்று வாலாஜா, வட்டாட்சியர் அலுவலகத்தில், தாவா சொத்தை அளக்க மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அதன்பேரில் ஜுலை 2020 ல் சர்வேயர், கத்தாரிக்குப்ப கிராம நிர்வாக அலுவலர், போலிசார், நான், 2 ம் பிரதிவாதி ஆகியோர் தாவா சொத்திடம் வந்தோம் என்றால் சரிதான். அப்பொழுது வாதிகள், தாவா சொத்தை அளவீடு செய்யக்கூடாது என்று தடுத்தார்கள் என்றால் ஆமாம், தடுத்தார்கள்.

2. வாதிகள், தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததால்தான் அளவீடு செய்ய எங்களை தடுத்தார்கள் என்றால் சரியல்ல. கலாட்டா செய்து அளவீடு செய்யவிடாமல் தடுத்ததால் சர்வேயர் அளவீடு செய்யமாமல் திரும்பி சென்றுவிட்டார். கடந்த 19.08.2020 அன்று வாதிகள், எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

3. அந்த வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் சேர்த்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம்

பிரதிவாதியும் வாங்கிக்கொண்டார் என்றால் சரிதான். மேற்படி வாதிகள் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு கடந்த 09.09.2020 அன்று தாவா சொத்தை அளவீடு செய்ய சர்வேயர், கத்தாரிக்குப்பம் கிராம நிர்வாக அலுவலர், போலிசார், நான், 2ம் பிரதிவாதி ஆகியோர் தாவா சொத்திடம் வந்தோம் என்றால் சரிதான். மேற்படி 09.09.2020 அன்று தாவா சொத்திடம் உரிய ஆவணங்களுடன் என்னை இருக்கச்சொல்லி குறுவட்ட சர்வேயர் எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு என்னிடம் காட்டப்படும் ஆவணந்தான் என்றால் சரிதான். (அறிவிப்பு நகல் வா.சா.ஆ.13)

4. கடந்த 09.09.2020 அன்றும் வாதிகள், தாவா சொத்தை அளவீடு செய்யக்கூடாது என்று தடுத்தார்கள் என்றால் ஆமாம், தடுத்தார்கள். வாதிகள், தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததால்தான் அளவீடு செய்ய எங்களை தடுத்தார்கள் என்றால் சரியல்ல. கலாட்டா செய்து அளவீடு செய்யவிடாமல் தடுத்ததால் சர்வேயர் அளவீடு செய்யாமல் திரும்பி சென்றுவிட்டார்.

5. தாவா சொத்தை அளவீடு செய்ய, நான், சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.14046/2020 வழக்கை தாக்கல் செய்து கடந்த 08.10.2020 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால், சரிதான். கடந்த 12.06.2020 அன்று, தாவா சொத்தை அளவீடு செய்ய மனு கொடுத்து, ஜீலை மாதத்தில் தாவா சொத்தை அளவீடு செய்ய வந்ததையும், வாதிகள் தரப்பில் எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் சட்ட அறிவிப்பு கொடுத்த பிறகு கடந்த 09.09.2020 அன்று சர்வேயர் தாவா சொத்தை அளவீடு செய்ய வந்ததையும் மறைத்து உயர்நீதிமன்றத்தில் W.P.No.14046/2020 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால், சரியல்ல. மேற்படி இருமுறையும் அளவீடு செய்ய வந்த விவரத்தை சொல்லிதான் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். நான், இரண்டு தேதிகளில் தாவா சொத்தை அளவீடு செய்ய வந்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

6. எனக்கு தாவா சொத்தில் உண்மையில் உரிமை இருந்திருந்தால், சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அதைவிடுத்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டிதான்

உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். உண்மையில் எனக்கு தாவா சொத்தில் அனுபவம் இருந்திருந்தால் நான் தாவா சொத்தை அளவீடு செய்ய உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால், சரியல்ல. அனுபவம் என்னிடம் இருந்ததால்தான் நான் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன்.

7. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாததால்தான் 2ம் வாதி திருமாறன் என்பவர் தாவா சொத்தை ஆக்கிரமித்து கொண்டதாக கடந்த 25.06.2016ல் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றாலும், மேற்படி தேதியில் திருமாறனுக்கு எதிராக புகார் கொடுத்தது உண்மை. அந்த புகாரில் தாவா சொத்தை திருமாறன் ஆக்கிரமிக்க முயற்சி செய்து வருவதாக சொல்லியுள்ளேன்.

8. நான், எதிர்வழக்குரை தாக்கல் செய்தபொழுது, மேற்படி 25.06.2016ல் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான சி.எஸ்.ஆர். நகலையும் சேர்த்து இவ்வழக்கில் தாக்கல் செய்திருந்தேன் என்றால், சரிதான். அது என்னிடம் காட்டப்படும் சி.எஸ்.ஆர். நகல்தான் (இது வா.சா.ஆ.14) என்றால் சரிதான். இந்த சி.எஸ்.ஆர். நகலில் மேற்படி திருமாறன் தாவா சொத்தை ஆக்கிரமித்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் புகாரில் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை. போலீசார் அவ்வாறு எழுதியுள்ளார்.

9. நான், புகாரில் என்ன தகவலை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்தேனோ, அந்த தகவலைதான் சி.எஸ்.ஆரில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள ச.எண்.114/2 சொத்தானது தாவா சொத்தைவிட மேடான பகுதியில் உள்ளதா, தாழ்வான பகுதியில் உள்ளதா என்றால், இரண்டுமே சமமாகத்தான் உள்ளது. ஆனால், கிழக்கில் உள்ள சொத்து சற்று மேடாகதான் உள்ளது.

10. பாஸ்கரராவ் என்பவர் 1ம் வாதியின் சகோதரர் முனுசாமி என்பவருக்கு தாவா சொத்தை கடந்த 1960ம் ஆண்டு கிரையம் கொடுத்துவிட்ட பிறகு தாவா சொத்தில் பாஸ்கரராவிற்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால், சரியல்ல. தாவா சொத்து வேறு, பாஸ்கரராவ் கிரையம் கொடுத்த சொத்து வேறு. தாவா சொத்துதான்

பாஸ்கரராவிற்கான உரிமையான சொத்து என்றாலும், தாவா சொத்தைதான் பாஸ்கரராவ் முனுசாமிக்கு கிரையம் கொடுத்தார் என்றாலும், சரியல்ல.

11. பாஸ்கரராவ் எந்த தேதியில் முனுசாமிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தாரோ, அந்த தேதியிலேயே அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டார் என்றாலும், அன்றுமுதல் இன்றுவரை தாவா சொத்தை வாதிகள்தான் அனுபவதித்து வருகிறார்கள் என்றாலும், சரியல்ல.

12. பாஸ்கரராவ் தாவா சொத்தை முனுசாமிக்கு கிரையம் கொடுத்துவிட்ட பிறகு தாவா சொத்து குறித்த கூட்டு பட்டாவான யூ.டி.ஆர் ஆவணத்தில் (பட்டா எண்.290) தாமோதரராவ் பெயரும், பாஸ்கரராவ் பெயரும் குறிப்பிட்டு கூட்டுப்பட்டாவாக வழங்கியிருப்பது செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

13. பி.வா.சா.ஆ.1 எனது தந்தை தாமோதரராவ் பெயரில் உள்ள தனி பட்டாவை வழக்கிற்காக நாங்கள் தயார் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. இந்த தனி பட்டாவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, போலியவணம் என்றாலும், சரியல்ல. வாதிகளின் வீடு தாவா சொத்திற்கு அருகில் உள்ள மேட்டு தெருவில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், இது எனக்கு தேவையில்லாத கேள்வி. வழக்கு சொத்திற்கு அருகில் மேட்டு தெரு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

14. தான செட்டில்மென்ட் (பி.வா.சா.ஆ.2)–ல் ஒரு வினோத்குமார் என்பவர் 1வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால், சரிதான். வினோத்குமார் என்பவர் கத்தாரி குப்பம் கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்தராக பணிபுரிந்தார் என்றால், சரிதான். வினோத்குமாரின் தூண்டுதலின் பேரிலும், செல்வாக்கின் பேரிலும் எனது தந்தை பெயரில் மோசடியாக தனி பட்டா எண்.290 பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. மோசடியாக பெற்ற தனி பட்டாவின் அடிப்படையில் தான செட்டில்மென்ட் பத்திரத்தை தயார் செய்தேன் என்றால், சரியல்ல.

15. தான செட்டில்மென்ட் பத்திரத்தில் 2வதாக சாட்சி கையெழுத்து போட்டுள்ள அர்ஜீனன் என்பவரை தெரியுமா என்றால், தான செட்டிமென்ட் பத்திரம் எழுதிய அன்று பார்த்தேன். நான், 2ம் பிரதிவாதி பெயரில் ஒரு பொது அதிகார ஆவணம் (வா.சா.ஆ.3) ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால், சரிதான். இந்த பொது அதிகார ஆவணத்தில்

முருகேசன் என்பவர் 1வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், 2வதாக ஒரு சண்முகம் என்பவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், சரிதான். சாட்சிகள் இருவரும் உடன்பிறந்த அண்ணன், தம்பி என்றால், சரிதான். பொது அதிகார ஆவணத்தில் 2வதாக சாட்சி கையெழுத்து போட்டுள்ள சண்முகம் என்பவரின் மகன்தான் தான செட்டில்மென்ட் பத்திரத்தில் 1வதாக சாட்சி கையெழுத்து போட்ட வினோத்குமார் என்றால், சரிதான்.

16. கடந்த 1996ம் ஆண்டு, கத்தாரிக்குப்பம் கிராமத்தில் ஊராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றது தெரியுமா என்றால், தெரியும். ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு 2ம் வாதி திருமாறனும், மேற்படி சண்முகம் என்பவரும் போட்டியிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். இந்த தேர்தலில் சண்முகம் வெற்றி பெற்றார் என்றால், சரிதான். அதனால், இரண்டு குடும்பத்தாருக்கும் தேர்தல் விரோதம் இருந்தது என்றால் எனக்கு தெரிந்து தேர்தல் விரோதம் இல்லை. உண்மையில் 2ம் வாதியின் குடும்பத்தாருக்கும், சண்முகம் குடும்பத்தாருக்கும் தேர்தல் விரோதம் இருந்தது என்றாலும், அதனை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

17. சண்முகம் என்பவரின் தம்பி முருகேசன் நிலத்தரகர், ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வினோத்குமாரின் மனைவி பெயர் ஆஷ்டலட்சுமி என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதும்பொழுது கத்தாரிக்குப்பம் கிராம ஊராட்சி மன்ற தலைவராக அஷ்டலட்சுமி இருந்தார் என்றால் இருந்திருக்கலாம், சரியாக தெரியவில்லை. ஆனால் அவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார்.

18. நான், வினோத்குமார், அஷ்டலட்சுமி, சண்முகம், மூர்த்தி, முருகேசன் ஆகியோர்களுடன் கூட்டுசேர்ந்து வாதிகளின் தாவா சொத்தை அபகரிக்க வா.த.சா.ஆ–3, பி.வா.த.சா.ஆ–1,2,4 ஆகிய ஆவணங்களை மோசடியாக தயார் செய்து, தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில், நானோ, எனது தந்தையோ எக்காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும், அதனால் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன்.

19. வாதிகளுக்குத்தான் முழுஉரிமை உள்ளது என்றாலும், கடந்த 1960 முதல் இன்று வரை வாதிகள்தான் அனுபவத்தில் இருந்துவருகிறார்கள் என்றாலும், வாதிகள் தாவாவில் கோரிய பரிகாரங்களை பெற உரிமையுடைவர்கள் என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 2.40 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.